**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**MCOP CASE NO.308/2025**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் -திருமதி.மதுமிதா **PW-1** தொழில் -

த/க பெயர் - வயது -

கிராமம் - தாலுக்கா -

<u>**முதல் விசாரணை:-**</u>

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

| S.No. | Documents | Exhibits No. |
|---|---|---|
| 1. | கோயமுத்தூர் மாவட்டம், செட்டிப்பாளையம் காவல்நிலைய குற்ற எண்.60/2023, முதல் தவகல் அறிக்கை ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.1 |
| 2. | மாதிரி வரைபடம் ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.2 |

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.24 17:10:23 +0530

| | | |
|---|---|---|
| 3. | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை TN 33 AJ 2121 Lancer Car ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.3 |
| 4. | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை TN 60 A 9993 மாருதி 800 கார் ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.4 |
| 5. | முத்து மருத்துவமனை விபத்து பதிவேடு ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.5 |
| 6. | முத்து மருத்துவமனை காயச்சான்றிதழ் ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.6 |
| 7. | குற்ற இறுதி அறிக்கை ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.7 |
| 8. | மருத்துவ பில்கல் (ரூபாய் 4,24,555/- 64 எண்ணிக்கைகள்) இந்த ஆவணம் 3-ம், 4-ம் மற்றும் 7-ம் மனுதாரரின் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டது. | ம.த.சா.ஆ.8 |
| 9. | 14.03.2023 - 29.03.2023 வரையிலான டிஸ்சார்ஜ் சம்மரி அசல் | ம.த.சா.ஆ.9 |

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.24 17:10:28 +0530

| | | |
|---|---|---|
| 10. | முத்து மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்டுள்ள எதிர்கால மருத்துவ செலவினங்களுக்கான எஸ்டிமேட். (இந்த ஆவணம் 3–ம், 4–ம் மற்றும் 7–ம் மனுதாரரின் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டது). | ம.த.சா.ஆ.10 |
| 11. | இந்துஸ்தான் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி யில் இருந்து வழங்கப்பட்ட Absent Certificate | ம.த.சா.ஆ.11 |
| 12. | FIR Status Report | ம.த.சா.ஆ.12 |

<u>**3–ம் மற்றும் 4–ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**</u>

விபத்து சமயத்தில் நான் கோவையில் இருந்து பொள்ளாச்சி சாலையில் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தேன் என்றால் சரி. என் மீது மோதிய கார் லேன்சர் கார் என்றால் சரி. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.த.சா.ஆ.7 இறுதி அறிக்கையில் லேன்சர் கார் நிலை தடுமாறு என் மீது மோதியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. விபத்திற்கு முழு காரணம் TN 33 AJ 2121 என்ற பதிவு எண் கொண்ட லேன்சர் கார் தான் என்றும் மாருதி 800 கார் ஓட்டுனர் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு நிரந்தர ஊனம் மற்றும் வருமான

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.24 17:10:33 +0530

இழப்பீடு இல்லை என்றால் சரியல்ல. நான் விபத்து நடந்த சமயம் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன் என்றால் ஆமாம், நான் படிப்பை நிறுத்தவில்லை படிப்பை முடித்து விட்டேன் என்றால் சரி. மருத்துவமனை பில்களை நான் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இழப்பீடு வழங்க நீதிமன்றம் உத்தரவிடும் பட்சம் 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் கூட்டாகவும் தனியாகவும் செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

<u>7-ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

மாருதி 800 கார் முன்னால் சென்று கொண்டிருந்த லான்சர் கார் மீது மோதி அதனால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரி. விபத்திற்கு முழு காரணம் மாருதி 800 ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரர் தான் என்றால் சரி. இதே விபத்தில் காயம் பட்ட மற்றொரு நபர் கோவை சிறப்பு சார்பு நீதிமன்றத்தில் இழப்பீடு மனு MCOP.No.462/2023 தாக்கல் செய்ததில் 3-ம் மற்றும் 4-ம் எதிர்மனுதாரர்கள் இழப்பீடு செலுத்தியுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆகையால் 7-ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இழப்பீடு நான் கோர இயலாது என்றால் சரியல்ல. ஏழாம் எதிர்மனுதாரரை பொருத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.24 17:10:40 +0530

Chief Judicial Magistrate,
Erode.